**பிரசார் பாரதி**

**அகில இந்திய வானொலி, சென்னை-4**

**01 04 2026 WEDNESDAY 7.15 PM**

**ஆகாஷவாணி**

**<u>தலைப்புச் செய்திகள்</u>**

1. **தேசிய கல்விக்கொள்கை மாணவர்கள் உற்சாகத்தோடு கல்வி கற்பதற்கான வாய்ப்பை உருவாக்கித் தந்திருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.**
2. **சட்டப்பேரவை தேர்தல் நடைபெறும் மாநிலங்களில் நடத்தை விதிமீறல் தொடர்பான புகார்களுக்கு விரைந்து முடிவெடுக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.**
3. **அனைத்து பயிர் ரகங்களின் விதைகள் போதிய அளவு கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.**
4. **மேற்காசிய நாடுகளில் நிலவும் போர் சூழலால் தங்கள் நாட்டு பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக பிரிட்டனும் ஆஸ்திரேலியாவும் தெரிவித்துள்ளன.**
5. **ஐ பி எல் கிரிக்கெட்டில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்கும் ஆட்டத்தில் லக்னோ -தில்லி அணியை எதிர்கொள்கிறது.**

**- - இனி விரிவான செய்திகள் -**

**<<<<<<>>>>>>**

**தேசிய கல்விக்கொள்கை மாணவர்கள் உற்சாகத்தோடு கல்வி கற்பதற்கான வாய்ப்பை உருவாக்கித் தந்திருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.**

மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் எழுதிய தேசிய கல்விக் கொள்கை தொடர்பான கட்டுரையை பாராட்டி சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், புதிய கல்விக் கொள்கை மாணவர்களிடையே கல்வி கற்பதற்கான ஆர்வத்தை தூண்டியிருப்பதாகவும், ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான அடிப்படை கல்வியை அளிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

மாணவர்களுக்கு தொடக்கத்திலேயே நாட்டின் மீதான பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறியுள்ளார்.

திரு. தர்மேந்திர பிரதான் எழுதியுள்ள கட்டுரையில் நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் தேசிய கல்விக் கொள்கை அமைந்துள்ளதை விரிவாக எடுத்துக் கூறியிருப்பதாகவும் மக்கள் இதனை படிக்க வேண்டும் என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>

அனைத்து பயிர் ரகங்களின் விதைகள் போதிய அளவில் கையிருப்பில் இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மேற்காசிய சூழலால் ஏற்பட்டுள்ள நிலைமையை சமாளிப்பது குறித்து புதுதில்லியில் அமைச்சகங்களுக்கு இடையே நடைபெற்ற

கூட்டம் குறித்து செய்தியாளர்களிடம் விளக்கிய வேளாண் கூடுதல் செயலர் டாக்டர் மணீந்தர் கவுர் திவேதி, 185 லட்சம் குவிண்டால் கரிப் பயிர்களுக்கான விதைகள் கையிருப்பில் உள்ளதாக தெரிவித்தார்.

நடப்பு கரிப் பருவத்திற்கு 46 சதவீத உரங்கள் கையிருப்பில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

வேளாண் ரசாயன பொருட்களும் தேவையான அளவு உள்ளதாக அவர் தெரிவித்தார்.

உயிரி பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தவும் இயற்கையான பயிர் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றவும் விவசாயிகளை மாநிலங்கள் ஊக்குவிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தக்காளி, வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற காய்கறிகளின் விலை கட்டுக்குள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பேசிய சிவில் விமான போக்குவரத்து இணைச் செயலர் Asangba Chuba, உள்நாட்டு போக்குவரத்துக்கான விமான எரிபொருளின் விலை 25 சதவீதம் உயர்த்தும் முடிவை தாம் வரவேற்பதாக கூறினார்.

மேற்காசிய போர் சூழல் காரணமாக மற்ற உலக நாடுகளில் எரிபொருள் விலை முன் எப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவைப் பொருத்தமட்டில் விமான எரிபொருள் விலை குறைந்த அளவே உயர்த்தப்பட்டு இருப்பதால் உள்நாட்டு போக்குவரத்து கட்டணங்கள் அதிகளவில் உயர வாய்ப்பு இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பேசிய பெட்ரோலிய துறை இணை செயலர் திருமதி. சுஜாதா சர்மா, வரும் இரண்டு மாதங்களுக்கு தேவையான கச்சா எண்ணெய் விநியோகத்தை தட்டுப்பாடின்றி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் முழு அளவில் செயல்பட்டு வருவதாகவும் சில்லறை விற்பனையில் பெட்ரோலிய பொருட்கள் தட்டுப்பாடு ஏற்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

பெட்ரோல் மற்றும் டீசல் மீதான கலால் வரியை மத்திய அரசு குறைத்திருப்பதால் சர்வதேச சந்தையில் ஏற்பட்டுள்ள விலையேற்றத்தின் பாதிப்பு பொதுமக்களுக்கு செல்லவில்லை என்றும்  திருமதி. சுஜாதா சர்மா கூறினார்.

< < < < < < > > > > >

அஸ்ஸாம், கேரளம், புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தல்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள மத்திய பார்வையாளர்களுடன் தேர்தல் ஆணையம் இன்று ஆய்வு மேற்கொண்டது.

காணொலி வாயிலாக நடைபெற் இந்த ஆய்வு கூட்டத்தில், 282 மத்திய பார்வையாளர்களும் அஸ்ஸாம், கேரளம் மற்றும் புதுச்சேரி தலைமை தேர்தல் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்த தேர்தல்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும், பொதுமக்கள் உற்சாகமாக வாக்களிக்கும் வகையில் தேர்தல் திருவிழா போன்று வாக்குப்பதிவுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் தேர்தல் ஆணையத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

தேர்தல் விதிமீறல் தொடர்பான புகார்களுக்கு நடத்தை நெறிமுறைகளின் படி விரைந்து முடிவெடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

வாக்குச்சாவடிகளில் அடிப்படை வசதிகள் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் இக்கூட்டத்தில் தேர்தல் ஆணையம் சார்பில் வலியுறுத்தப்பட்டது.

<<<<<<>>>>>>

சிறிய வகை குற்றங்களை, குற்றவியல் நடைமுறை சட்டத்தில் இருந்து நீக்குவது மற்றும் ஒழுங்கு படுத்துவதற்கான சட்ட திருத்த மசோதா இன்று மக்களவையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மத்திய அரசின் 23 அமைச்சகங்கள் தொடர்புடைய 79 சட்டங்களை திருத்துவதற்கு இம்மசோதா வகை செய்கிறது.

இம்மசோதா மீதான விவாதத்தை தொடங்கி வைத்து பேசிய திரு. Chamala Kiran, பல முக்கிய சட்டங்கள் குற்றவியல் நடைமுறையில் இருந்து நீக்கப்படுவதாகவும், இது ஊழலுக்கு வழிவகுக்கும் என்றும் கூறினார்.

மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் இந்த சட்ட திருத்தம் அமையவில்லை என்றும் அமைப்பு ரீதியான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் இம்மசோதா இல்லை என்றும் கூறினார்.

பிஜேபி உறுப்பினர் திரு. தேஜஸ்வி சூர்யா பேசுகையில், மசோதாவை வரவேற்பதாக கூறினார்.

தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் சிக்கலின்றி மேற்கொள்வதற்கு இம்மசோதா வழி செய்வதாக அவர் கூறினார்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறிய வகை குற்றங்களை ஒருங்கிணைத்து அதற்கான தீர்வு காணப்பட்டு இருப்பதாகவும் திரு. தேஜஸ்வி சூர்யா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மேற்காசிய நாடுகளில் நிலவும் போர் சூழலால் தங்கள் நாட்டு பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக பிரிட்டனும் ஆஸ்திரேலியாவும் தெரிவித்துள்ளன.

பிரிட்டன் பிரதமர் திரு. Keir Starmer இன்று லண்டனில் செய்தியாளர்களிடம் பேசுகையில், மேற்காசியாவில் நிலவும் கடுமையான சண்டை காரணமாக தங்கள் நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளை மிகுந்த சிரமத்துடன் ஏற்றுக்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

மேற்காசிய பகுதியில் நிலவும் சூழலை ஈரான், மேற்காசிய நாடுகள் இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகளுக்கு இடையிலான மோதலாக மட்டும் கருத முடியாது என்றும் இதனால் பிரிட்டன் பொருளாதாரமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

பிரிட்டன் மக்களின் அன்றாட செலவுகள் கணிசமாக அதிகரித்துள்ளது என்றும், மேற்காசிய மோதல்களுக்கு எவ்வாறு பிரிட்டன் ஆதரவு அளிக்க முடியும் என்றும் கேள்வி எழுப்பினார்.

மேற்காசிய போர் சூழலை விரைவில் முடிவுக்கு கொண்டு வந்து ஹோர்முஸ் நீரிணையை அனைத்து நாடுகளின் போக்குவரத்துக்கும் திறந்து விட வேண்டும் என்று தாங்கள் விரும்புவுதாக கூறினார்.

பிரிட்டனின் நிலைப்பாட்டை உலக நாடுகளுக்கு வெளியுறவுத் துறை அமைச்சர் விரைவில் முறைப்படி தெரிவிப்பார் என்றும் அவர் கூறினார்.

முன்னதாக ஆஸ்திரேலிய பிரதமர் திரு. Anthony Albanese நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், மேற்காசிய போர் சூழல் காரணமாக ஆஸ்திரேலிய மக்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்பு ஆஸ்திரேலியாவில் பல மாதங்களுக்கு தொடரும் என்றும் அவர் கூறினார்.

எரிபொருள் தட்டுப்பாட்டை சமாளிக்க தேசிய எரிபொருள் திட்டம் ஒன்றை வகுத்துள்ளதாகவும், இதனால் ஓரளவு நிலைமையை சமாளிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு விநியோகிக்கும் பெட்ரோலிய பொருட்களுக்கான வரியை மூன்று மாதங்களுக்கு ரத்து செய்திருப்பதாகவும் அவர் கூறினார்.

பொதுமக்கள் எரிபொருட்களை பதுக்கி வைக்க வேண்டாம் என்றும் தங்கள் தேவைக்கு மட்டும் வாங்கி சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

சொந்த வாகனங்களை தவிர்த்து பொது போக்குவரத்தை பயன்படுத்துமாறு ஆஸ்திரேலிய பிரதமர் நாட்டு மக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனிடையே அமெரிக்க அதிபர் மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஈரான் பிரச்சினை குறித்து முக்கிய தகவல்களை அதிபர் திரு. டோனல்ட் டிரம்ப் நாளை தெரிவிக்க உள்ளதாக கூறியுள்ளது.

<<<<<<>>>>>

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் லக்னோ அணி இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.

சற்று நேரத்தில் தொடங்கும் இப்போட்டியில் டாஸ் வென்ற தில்லி அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

----------

ஆசிய கோப்பை மூவர் கூடைப்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா 19 -18 என்ற புள்ளிக்கணக்கில் ஹாங்காங்கை வென்றது.

**சிங்கப்பூரில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் இந்தியா முதல் ஆட்டத்தில் 20-18 என்ற புள்ளிக்கணக்கில் கஜகஸ்தானை வென்றது.**

**----------------------**

**ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் விஷ்வநாத் சுரேஷ் மற்றும் Sachin Siwach காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.**

**Ulaanbaatarல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 50 கிலோ எடைப்பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் விஷ்வநாத் சுரேஷ், 5-0 என்ற புள்ளிக்கணக்கில் Bekzat Ergeshov -ஐ வென்றார்.**

**ஆடவர் 60 கிலோ எடைப்பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் Sachin Siwach 4-1 என்ற புள்ளிக்கணக்கில், Buyandalai Bayarkhuu-வை வென்றார்.**

**----------------------**

**உலக ஸ்குவாஷ் தகுதிச்சுற்றுப் போட்டியில் இந்தியாவின் தன்வி கண்ணா காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.**

**ஹாங்காங்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர்,**

**11-9, 11-6, 11-4 என்ற செட் கணக்கில், Macao-வின் Gigi Yeung-ஐ வென்றார்.**

**-----------------------**

**Bucharest ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – ஆஸ்திரியாவின் Neil Oberleitner இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.**

**ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 2-6, 6-1, 12-10 என்ற செட் கணக்கில், ரோமேனியாவின் Mircea Alexandru Jecan – Bogdan Pavel இணையை வென்றது.**

**-----------------**

**செஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் மகளிர் பிரிவில் இந்தியாவின் திவ்யா தேஷ்முக் பத்தாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.**

**------------**

**டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் அபிஷேக் சர்மா முதலிடத்திலும், இஷான் கிஷன் இரண்டாவது இடத்திலும் நீடிக்கின்றனர்.**

<<<<<<END>>>>>>